செ.வெ.எண்: 50 / ஆகஸ்ட் /2019 நாள்: 20.08.2019

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மற்றும் நகரங்களில் அனைத்து வார்டுகளிலும் குறைதீர்க்கும் முகாம் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகர்புற வளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை மற்றும் பிறதுறை சார்ந்த அலுவலர்கள் குழுக்கள் ஆகஸ்ட் 21-ம் தேதி முதல் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

-----

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மற்றும் நகரங்களில் அனைத்து வார்டுகளிலும் குறைதீர்க்கும் முகாம் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகர்புற வளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை மற்றும் பிறதுறை சார்ந்த அலுவலர்கள் குழுக்கள் ஆகஸ்ட் 21-ம் தேதி முதல் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 18.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்ற விதி எண்.110-ன் கீழ் அறிவித்துள்ளதற்கிணங்க, கடந்த 19.08.2019 அன்று சேலம் மாவட்டத்தில், **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் படி,** அனைத்து கிராமங்களிலும் மற்றும் நகரங்களில் அனைத்து வார்டுகளிலும் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகர்புற வளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை மற்றும் பிறதுறை சார்ந்த அலுவலர்கள் குழுக்கள் ஆகஸ்ட் 21-ம் தேதி முதல் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட உள்ளது. எனவே பொதுமக்கள் தங்கள் வார்டு/கிராமங்களில் நடைபெற உள்ள முகாம்களில் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.சிவராசு,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**